பக்கங்கள் 18+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 27 வியாழக்கிழமை 11.09.2025 | அதிர்வு 43

## மைத்திரியும் வெளியேறினார்



கொழும்பு, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் இருந்து

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கொழும்பிலிருந்து தங்காலைக்கு கிளம்பிய மஹிந்த!

கொழும்பு, விஜேராம மாவத்தையிலுள்ள அரச வதிவிடத்தில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று வெளியேறினார்.

இன்று பிற்பகல் அவர் வெளியேறும்போது, அந்தப் பகுதியில் மொட்டுக் கட்சி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் ஒன்றுகூடி இருந்தனர்.

03

# கொழும்பு – விஜேராம இல்லத்தில் மஹிந்தவைச் சந்தித்த சீனத் தூதர்





முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு, விஜேராம அரச இல்லத்தில் இருந்து இன்று பிற்பகல் வெளியேறி அம்பாந்தோட்டை – தங்காலைக்குக் குடியேறச் சென்றுள்ளார். இந்நிலையில், மஹிந்த விஜேராம அரச இல்லத்தில் இருந்து வெளியேற முன்னர் இலங்கைக்கான சீனத் தூதுவர் அங்கு சென்று அவரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்தப் பதிவில், “விஜேராமவிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து நான் புறப்படுவதற்கு முன்னர், இலங்கைக்கான சீனத் தூதுவரை சந்தித்து கலந்துரையாடியதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது வருகைக்கு நான் நன்றி தெரிவிப்பதுடன், எமது நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர மற்றும் தனிப்பட்ட உறவு ரீதியான நீடித்த நட்புறவை நான் அன்புடன் நினைவுகூருகின்றேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இன்று முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் – இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் பலரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்திப்பதற்கு விஜேராம இல்லத்துக்குச் சென்றிருந்தனர்.

ஆதரவாளர்களின் கோஷங்களுக்கு மத்தியில் அவர் அங்கிருந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு!

## இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் படுகாயம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பணம், குரும்சிட்டி – தெல்லிப்பழை வைத்தியசாலை வீதியில் இன்று வியாழக்கிழமை காலை வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட குழு ஒன்று குடும்பஸ்தர் மீது வாள்வெட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய நபரே வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் படுகாயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# இராணுவ வாகனம் மோதி இளைஞர் ஒருவர் படுகாயம்

## ஆவரங்காலில் நேற்று இரவு சம்பவம்



யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் வாகனம் மோதி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆவரங்கால் பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு இராணுவத்தினரின் கன்ரர் ரக வாகனம் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞருடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞரை வீதியில் சென்றவர்கள் மீட்டு, அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கிளம்பிய மஹிந்த...

அத்துடன், மஹிந்த ராஜபக்ஷ வெளியேறுவதற்கு முன்னர் அவரை இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலரும் சந்தித்திருந்தனர்.

இவ்வாறு வெளியேறியுள்ள மஹிந்த ராஜபக்ஷ, தங்காலையிலுள்ள தனது கால்டன் இல்லத்தில் குடியேறவுள்ளார். அவரை அங்கு வரவேற்பதற்குரிய ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகள் அனைத்தும் நீக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசு அறிவித்திருந்தது. இதற்கமைய அரச மாளிகையில் இருந்து வெளியேறுமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஊடக சந்திப்புகள் மூலம் வலியுறுத்தப்பட்டது.

எனினும், தனக்குச் சட்டபூர்வமாக அறிவித்தால் மட்டுமே அது பற்றி பரிசீலிக்க முடியும் என மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். இதனால் இந்த விவகாரம் அரசியல் ரீதியிலும் பேசு பொருளானது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஜனாதிபதிகளுக்குரிய உரித்துரிமைகளை நீக்குவதற்குரிய சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனைச் சபாநாயகர் சான்றுரைப் படுத்தியுள்ளதால் சட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இதனையடுத்தே அரச மாளிகையில் இருந்து இன்று மஹிந்த வெளியேறினார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலையே ராஜபக்ஷக்களின் பூர்வீகம், அரசியல் கோட்டை. அங்கிருந்தே மஹிந்தவின் அரசியல் பயணம் கூட ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது.

மஹிந்தவின் வெளியேற்றம் குறித்து கருத்து வெளியிட்ட மொட்டுக் கட்சி பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன,

"செப்டெம்பர் 11 என்பது உலகில் பலம் பொருந்திய நாட்டுக்கும் பயங்கரவாதத்தின் அச்சம் தென்பட்ட நாளாகும். செப்டெம்பர் 11 தாக்குதல் நடந்த நாளாகும்.

பயங்கரவாதிகளிடம் இருந்து இலங்கையைப் பாதுகாத்த தலைவர் இப்படியானதொரு நாளில் அதிகாரபூர்வ வதிவிடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஓய்வுபெற்ற பின்னர் அவருக்கு இந்த வீட்டை (விஜேராம) வழங்குமாறு நான் யோசனை முன்வைக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ என்பவர் அநுரவுக்குப் பயந்தவர் அல்லர்." – என்று குறிப்பிட்டார்.

#### மஹிந்தவின் அரசியல் பயணம்

- 1970 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பெலியத்த தொகுதியில் போட்டியிட்ட அவர், 23 ஆயிரத்து 103 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். நாடாளுமன்றத்துக்கு இளம் வயதில் (25) தெரிவான உறுப்பினர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.
- 1977 : பொதுத்தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்தார்.
- 1989 : அம்பாந்தோட்டை மாவட்டத்தில் களமிறங்கி, 13 ஆயிரத்து 73 வாக்குகளைப்பெற்று மீண்டும் நாடாளுமன்றத்துக்கு மஹிந்த தெரிவானார்.
- 1994 : இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட மஹிந்த, 78 ஆயிரத்து 77 வாக்குகளுடன் சபைக்குத் தெரிவானார். இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றிநடை போட்டது.
- 1994 இல் சந்திரிகா தலைமையிலான அமைச்சரவையில் தொழில் அமைச்சுப் பதவி மஹிந்தவுக்கு வழங்கப்பட்டது. 1997 வரை அந்தப் பதவியில் அவர் நீடித்தார்.
- 1997 இல் மீன்பிடித்துறை அமைச்சுப் பதவி மஹிந்தவுக்கு ஒப்படைக்கப்பட்டது. 2001 வரை அந்தப் பதவியை அவர் வகித்தார்.
- 2001 பொதுத்தேர்தலில் 109 ஆசனங்களை வென்று ஐ.தே.க. ஆட்சி அமைத்தது. அவ்வேளை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட மஹிந்த நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.
- 2004 : பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது. சபைக்குத் தெரிவான மஹிந்தவுக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட்டது. 2002 முதல் 2004 வரை அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.
- 2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த களமிறங்கினார். 48 இலட்சத்து 87 ஆயிரத்து 152 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.
- 2010 : ஜனாதிபதித் தேர்தலில் 2ஆவது முறையும் மஹிந்த போட்டியிட்டார். 60 இ லட்சத்து 15 ஆயிரத்து 934 வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றார்.
- 1978 : அரசமைப்பின் பிரகாரம் நபர் ஒருவர் இரு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. 18 ஆவது திருத்தச் சட்டம்மூலம் இந்த ஏற்பாட்டை மஹிந்த – கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மாற்றினார்.
- 2015இல் மூன்றாவது முறையும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த போட்டியிட்டார். எனினும், அவரால் வெற்றி பெற முடியவில்லை.
- 2015இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் களமிறங்கிய மஹிந்த 4 இலட்சத்து 23 ஆயிரத்து 529 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்கு எதிரணி உறுப்பினராக வந்தார்.
- 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சியின் மஹிந்த பிரதமராகப் பதவியேற்றார்.
- 2018 டிசம்பர் 15 ஆம் திகதி பிரதமர் பதவியை மஹிந்த இராஜினாமா செய்தார்.
- 2018 டிசம்பர் 18 இல் எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த நியமிக்கப்பட்டார்.
- 2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றதையடுத்து, நவம்பர் 21 ஆம் திகதி பிரதமராக மஹிந்த பதவியேற்றார்.
- 2020 பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு 5 இலட்சத்து 27 ஆயிரத்து 364 வாக்குகளை மஹிந்த பெற்றார். அவர் மீண்டும் பிரதமராகப் பதவியேற்றார்.
- அரகலயப் போராட்டத்தால் 2022 மே 9 ஆம் திகதி, பிரதமர் பதவியில் இருந்து விலகும் அறிவிப்பை மஹிந்த விடுத்தார்.
- 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மஹிந்த போட்டியிடவில்லை.

இந்நிலையில், அன்று அரசியலை ஆரம்பித்த இடத்துக்கே இன்று குடியேறுவதற்கு மஹிந்த சென்றுவிட்டார்.

எனினும், கொழும்பு, விஜேராம மாவத்தையிலுள்ள அரச வதிவிடத்தில் இருந்து மஹிந்த இன்று வெளியேறும் போது, "நான் அரசியலில் இருந்து விலகவில்லை" – என்று அங்கு திரண்டிருந்த ஆதரவாளர்கள் மத்தியில் தெரிவித்திருந்தார்.

### மைத்திரியும்...

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் 150 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதை அடுத்து,முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலத்தில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தனது கையொப்பத்தையிட்டு நேற்று சான்றுரைப்படுத்தினார். இதற்கமைய குறித்த சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமாக நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த சிறப்பு வரப்பிரசாதங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.



# குருக்கள்மடம் மனிதப் புதைகுழி பகுதியை இன்று நேரில் சென்று பார்வையிட்ட நீதிபதி

**(வ.சக்திவேல்)**

மட்டக்களப்பு – குருக்கள்மடத்தில் மனிதப் புதைகுழி அமைந்துள்ளதாகக் கருதப்படும் இடத்தைக் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இன்று வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர்.

1990ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணித்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு இன்று களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது உரிய நபர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கருதப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தை, இன்று நீதிபதி ஜே.பீ.ஏ.ரஞ்சித்குமார் முன்னிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர், சட்டத்தரணிகள், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர், பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக அதிகாரிகள், சட்ட வைத்திய நிபுணர்கள், தடயவியல் பொலிஸார், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பலரும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் உரிய இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

சம்பவ இடத்தில் புதைக்கப்பட்ட மனித எச்சங்களைத் தோண்டி எடுக்குமாறு ஏற்கனவே களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் இன்று நீதிபதி தலைமையிலான உயர் அதிகாரிகள் உரிய இடத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

குருக்கள்மடம் கடற்கரைப் பகுதியை அண்மித்ததாக உள்ள இடம் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்குப் பாதுகாப்பு வலயம் அமைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.











# பெரிய தந்தங்கள் கொண்ட 'மகாசிலு' யானை இலுக்பிட்டிய வயலில் இறந்த நிலையில் மீட்பு

பெரும்பாலும் புத்தல மற்றும் ஒக்கம் பிட்டிய பகுதிகளில் அடிக்கடி காணப்படும் சாந்தமான - அமைதியான - மற்றும் அதன் பெரிய தந்தங்கள் காரணமாக மக்களினால் வாஞ்சையுடன் நோக்கப்பட்ட - மகாசிலு என்று அழைக்கப்படும் ஒரு பிரபலமான காட்டு யானை ஒக்கம்பிட்டிய, இலுக்பிட்டியவில் உள்ள ஒரு நெல் வயலில் இன்று காலை இறந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

மரணத்திற்கான காரணம் இன்னும் தெரியவில்லை, மேலும் வனவிலங்கு அதிகாரிகள் சிறப்பு விசாரணையைத் தொடங்கியுள்ளனர். யானை எவ்வாறு இறந்தது என்பதைக் கண்டறிய பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மொனராகலை வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழில் குளவி கொட்டி வயோதிபப் பெண் பலி!

யாழ்ப்பாணத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை – வித்தகபுரத்தைச் சேர்ந்த 82 வயதுடைய வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

மேற்படி வயோதிபப் பெண் நேற்று முன்தினம் வீட்டுக்குப் பின்னால் தென்னை ஓலையுடன் இருந்த மிகவும் பெரிய ஒரு குளவிக்கூட்டைத் தட்டிப் பார்த்துள்ளார். இதன்போது அதில் இருந்த குளவிகள் அவர் மீது கொட்டியது.

பின்னர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

சாட்சிகளை தெல்லிப்பழை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் உபதேசம்

‘சட்டியைப் பார்த்துப் பானை கறுப்பு என்றதாம்.’ அது போன்று இருக்கின்றது நேபாள நிலைமை குறித்து இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிக்கை.

“புத்தரின் பிறப்பிடமான நேபாளம் இலங்கைக்கு ஒரு தனித்துவமான நட்பு நாடாகும். அவ்வாறு இருக்கையில் காட்டுமிராண்டித்தனமான செயல்களை இத்தகைய நாட்டில் பொறுத்துக் கொள்ள முடியாது. அரசு நிர்வாகத்தில் காட்டப்பட்ட திறமையின்மையும் இந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என எண்ணத் தோன்றுகின்றது.” - இப்படி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

புத்தர் வழிப்படுத்திய பௌத்தமும், அவரின் பஞ்சசீலக் கொள்கையும் கோலோச்சும் நாடாக அரசமைப்பு மூலம் தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள இலங்கையில் - இந்த நாட்டில் - எத்தகைய காட்டுமிராண்டித்தனம் அரங்கேறியது, இன்னமும் தொடர்கின்றது என்பதை மறந்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேபாளம் குறித்து தத்துவம் பிளக்கப் புறப்பட்டிருக்கின்றார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

பௌத்தத்தையும் சிங்களத்தையும் போஷித்து வளர்த்துப் பேணுவது தனது பிரதான கடப்பாடு என்பதை அரசமைப்பு மூலமே உறுதிப்படுத்திய இலங்கைத் தீவில், சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட - தொடர்ந்து இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற - கொடூரங்களும், காட்டுமிராண்டித்தனமும், படுகொலை மற்றும் இனவழிப்பு அடக்குமுறைக் கலாசாரமும், பௌத்த சாசனம் பற்றி பேசுவதற்கான அருகதையையே இலங்கை அரசுத் தலைவர்களுக்கு இல்லாமல் செய்து விட்டன. அப்படி இருக்கையில், அதே பண்புகளைப் பிரதிபலித்த புத்தரின் பிறப்பிடத்தை நோக்கி ஏதோ பஞ்சசீலத்தை தலை மேல் தூக்கி வைத்து பேணுகின்ற தேசம் போல தமது தாயகத்தைக் கருதிக்கொண்டு ‘உருத்திராட்சப் பூனை’ உபதேசம் செய்கின்றார் முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க.

யுத்தத்தின் போது தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், உரிமை மீறல்கள், இன வழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நீதி, நேர்மையான, சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணைகளை முன்னெடுக்கவும், உண்மைகளைக் கண்டறியவும், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தவும், குற்றம் இழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தவும் மறுத்து நிற்கும் இலங்கையில், தொடர்ந்து வரும் ஆட்சிப் பீடங்கள் புத்தரின் பஞ்சசீலம் பற்றி உரைப்பதற்கு அடிப்படைத் தகுதியற்றவை.

அந்தத் தவறுகளை நிவர்த்திக்காமல் தொடர்ந்து குற்றம் இழைத்த படி, தமிழர்களின் தாயகப் பூமியை ஆக்கிரமித்துக் கபளீகரம் செய்து, அடக்குமுறைகளை தொடர்ந்து ஏவி விட்டபடி, தொடர் குற்றத்தை இழைத்து வரும் இலங்கைத் தேசத்தின் தலைவர்கள், நேபாளத்தில் கட்டவிழ்ந்த வன்முறைகளைக் கண்டிக்கும் அடிப்படைத் தகுதி கூட அற்றவர்கள் என்பதை மறந்து பேசுகிறார்கள்.

நேபாளத்தில் நீண்ட காலமாக காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை, பிரச்சினைகளைத் தீர்க்காத அரசாங்கத்தின் போக்கே நேபாளத்தின் அழிவுக்குக் காரணமாகி உள்ளது என்று கூறும் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் சிறுபான்மையினரின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான விடயத்திலும் அதுதான் நடக்கிறது, அதன் விளைவுதான் இந்த நாட்டை உலுக்கிய இரத்த ஆறு ஓடிய யுத்தத்துக்குக் காரணம், இன்னமும் அதனால் மோசமான விளைவுகள் ஏற்படும் ஆபத்து உண்டு என்பதை எல்லாம் வெளிப்படையாக பேசத் தயாராக இல்லை.

ஏனெனில் புத்தரின் பஞ்சசீலத்திற்கு மாறாக இலங்கையின் சிறுபான்மையினரைக் கொடூரமாக அடக்கி ஒடுக்கும் காட்டுமிராண்டித்தன கட்டமைப்பின் பங்காளிகளில் அவரும் ஒருவர். அவர், ‘ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி’ என்ற பாணியில் தத்துவம் உரைப்பது நகைப்புக்கு இடமானது.

# வழக்குத் தொடர்பான கொடுப்பனவுகளை வங்கி அட்டைகள் மூலம் செலுத்த வசதி

வழக்கு தொடர்பான கொடுப்பனவுகளை வங்கி அட்டைகள் மூலம் ஏற்றுக் கொள்ளும் வசதியை உயர் நீதிமன்றம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனடிப்படையில், இலங்கையின் நீதித்துறை டிஜிட்டல்மயமாக்கலை நோக்கி முன்னோக்கிச் செல்லவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள உயர் நீதிமன்ற வளாகத்தில் பிரதம நீதியசரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமையில் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இது, சட்டத்தரணிகள் மற்றும் பொது மக்கள் வங்கி அட்டை பரிவர்த்தனைகள் மற்றும் இணையவழி மூலம் அபராதம், வழக்கு கட்டணம், முத்திரை வரி மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல்களுக்கான கட்டணங்கள் போன்ற கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு உதவுகிறது.

இந்த நடவடிக்கை நீதிமன்ற அமைப்பில் பணம் செலுத்துவதை தானியங்கிமயமாக்குவதற்கான ஆரம்ப கட்டத்தைக் குறிக்கிறது.

இந்த வசதியை நீதவான் நீதிமன்றங்களிலிருந்து உயர் நீதிமன்றம் வரை விரிவுபடுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



# கெஹெல்பத்தர பத்மேவுடன் தொடர்பு; சப் இன்ஸ்பெக்டர் சி.ஐ.டியினரால் கைது





பாதாள உலகத் தலைவர் கெஹெல் பத்தர பத்மேவுடன் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் கம்பஹா பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றும் உதவி பரிசோதகர் குற்றப் புலனாய்வுத் துறையினர் கைது செய் துள்ளனர்.

புலனாய்வாளர்களின் கூற்றுப்படி, இந்தோனேசியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட பத்மே மற்றும் நான்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிர முகர்களுடன், அந்த அதிகாரி உற வைப் பேணி வந்தார் என சந்தேகிக் கப்படுகிறது.

இந்தநிலையில், பாதாள உலக வலையமைப்பில், மேற்படி அதிகாரி யின் தொடர்பு எந்த அளவிற்கு உள்ளது என்பது குறித்துக் குற்றப்புலனாய் வுத்துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# அந்நாஸர் வித்தியாலயத்தில் இணைய வசதிக்கு நிதி உதவி





மட்டக்களப்பு மத்தி அந்நாஸர் வித்தியாலயத்தில் நீண்டகாலமாக இணைய வசதி துண்டிக்கப்பட்டிருந்ததால், சுமார் 50இற்கும் மேற்பட்ட கணினிகள் மற்றும் ஸ்மார்ட் தொழில்நுட்ப திரை போன்ற வளங்களை மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் இருந்தனர்.

குறிப்பாக தொழில்நுட்பக் கல்வி பாடத்தை பயிலும் மாணவர்கள் இணைய வசதி இன்றி பாடங்களை முழுமையாக கற்க முடியாத சூழ்நிலையும் நிலவி யது.

இந்த அவசரத் தேவையைப் பாட சாலை அதிபர் ஏ.எம். அப்துர் ரஹ்மான் ஊடாக அறிந்ததையடுத்து, நேற்று கணினி ஆய்வுகூடத்திற்கான இணைய வசதியை ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திட மிருந்து பெற்றுக்கொள்வதற்கான உத் தேச செலவு அறியப்பட்டது.

இதனை நிறைவேற்றுவதற்காக காத் தான்குடி நகர சபை உறுப்பினர் ஈ.எம். றுஸ்வின், தனது ஓகஸ்ட் மாத நகர சபை கொடுப்பனவான 15,000 ரூபாவை பாட சாலை அதிபர் ஏ.எம். அப்துர் ரஹ்மான் மற்றும் பா.அ.ச. செயலாளர் றியாஸ் முகமட் ஆகியோரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் பாட ஆசிரியர், சகோதரர் முகமத் ஷுஹைல், அல்ஹாஜ் அபுல் ஹஸன் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# பாரதி என்றுமே தமிழுக்குச் சொத்தாவான்!



**இன்று பாரதி நினைவு தினம்.
அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது**

பாரதி எங்கள் பண்பாட்டுப் பெட்டகம்
பட்டதைப் பக்குவமாய் ஈந்திட்ட வரகவி
விடுதலை நோக்கியே விரைந்திட்ட வீரன்
வீரமும் விவேகமும் நிறைந்த நற்கவிஞன்

தமிழன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வன் பாரதி
அமுதென்று தமிழதனை அகமிருத்திச் செப்பினான்
பன்மொழிகள் தெரிந்தாலும் தாய்மொழியாம் தமிழை
தலையேற்றி நின்று தரணிக்கே உரைத்தான்

முற்போக்குச் சிந்தனையை முன்னுக்கு வைத்தான்
பிற்போக்கு என்றாலே பிய்த்துமே எறிந்தான்
நற்போக்கு உள்ளோரை நயந்தேற்றி நின்றான்
நாட்டின் விடுதலைக்காய் நலமிழந்தும் நின்றான்

மூடத் தனத்தை மூர்க்கமாய் எதிர்த்தான்
சாதித் திமிரை தகர்த்தெறிந்து நின்றான்
உண்மையை நேர்மையை உயிரெனவே எண்ணினான்
கண்ணிலே கம்பீரம் காட்டியே நின்றான்

பாரதியின் பாட்டு பாமரர்க்கு விருந்தாகும்
பண்டிதர்க்கு அவர்பாட்டு வேண்டாத மருந்தாகும்

பாப்பாவை முன்னிறுத்திப் பலவுரைத்தான் பாரதி
பற்பல தத்துவங்கள் பலருக்கும் இருந்தன

பக்தியைப் பாரதி பக்குவமாய்ப் பார்த்தான்
சத்தியமாய் பக்தியாய் தன்மனதில் இருத்தினான்
கீதையைப் பாடினான் கண்ணனைப் பாடினான்
பாஞ்சாலி சபதத்தால் பலவற்றைக் கூறினான்

எதுகையும் மோனையும் இணைந்துமே நின்றன
எத்தனையோ வித்தைகளை கவிதையில் காட்டினான்
பாரதியின் பாட்டைப் பலருமே படித்திட்டால்
பார்க்காத அத்தனையும் பார்த்துமே வியந்திடலாம்

அடிமைத் தளையகற்ற அத்தனையும் பாடினான்
ஆனாலும் அதனூடே அன்னைத்தமிழ் ஒளிர்ந்தது
அதிகார வர்க்கத்தை அவன்பாட்டு அசைத்தது
அஞ்சாத சிங்கமாய் அவனெங்கும் திரிந்தானே

விடுதலை வேண்டுவார் பாரதியைப் பார்க்கின்றார்
வீரத்தை நாடுவார் பாரதியை நாடுகிறார்
பக்திக்கும் பாரதியே பண்புக்கும் பாரதி
பாரதி என்றுமே தமிழுக்குச் சொத்தாவான்!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
(மேனாள் தமிழ் மொழிக்கல்வி
இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)





# கோல்ட் மைன்ட் விளையாட்டுக்கழக விசேட விளையாட்டு சபைக் கூட்டம்

மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டு கழகத்தின் விசேட விளையாட்டு சபை கூட்டம் பிரதான வீதி வர்த்தக கட்டிட தொகுதியில் நேற்று மாலை கழகத்தின் தலைவர் அல் ஹாஜ் கலில் முஸ்தபா தலைமையில் இடம்பெற்றது.

நாளை இடம்பெறவுள்ள அப்துல் அஸிஸ் வெற்றி கிண்ணம் உதைபந்தாட்ட சுற்று போட்டியின் இறுதி போட்டி தொடர்பில் கோல்ட் மைன்ட் விளையாட்டு கழகம் இந்த போட்டியை எதிர் கொள்வது தொடர்பில் பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்த நிகழ்வில் ஓய்வுநிலை வலய கல்வி பணிப்பாளர் கழகத்தின் முதல் தவிசாளர் உயர்பீட உறுப்பினர் எம்.எஸ். அப்துல் ஜலில் விசேட சமுகளித்து கடந்த போட்டிகளில் கழகத்தின் பலம் பலவீனம் தொடார்பில் விரிவான விளக்கமளித்தார் .







# சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மாட்டிறைச்சியுடன் மூவர் கைது





(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட ஒரு தொகுதி மாட்டிறைச்சியுடன் மூவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் சட்டவிரோதமாக மாடு ஒன்று வெட்டப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் மற்றும் வள்ளிபுனம் பகுதி பொது சுகாதார பரிசோதகர், விசுவமடு பகுதி பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட இறைச்சிகளை கைப்பற்றி மூவரை கைதுசெய்தனர்.

மேற்படி மாடு பசு மாடு என்பதுடன் சுகாதார சீர்கேட்டுடன், சட்டரீதியற்ற இடத்தில் சட்ட ரீதியற்ற முறையில் இறைச்சிக்காக வெட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபர்கள் மூவரையும் பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு முற்படுத்தப்படவுள்ளனர் .

வள்ளிபுனம் தேவிபுரம் பகுதிகளில் தொடர்ச்சியாக பசு மாடுகள் களவாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சம்மாந்துறை பத்திரகாளி அம்பாளின் வருடாந்த தீமிதிப்பு சடங்கு ஆரம்பம்

**(வி.ரி. சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ்க் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு சடங்கு வைபவம் நாளை மறு தினம் சனிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு இடம்பெற்று , எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கள் கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

காரைதீவு கண்ணகையம்மன் ஆலய முன்னாள் கப்புவார் க.பாஸ்கரனின் ஆசீர்வாதத்துடன் ஆலயபிரதம பூசகர் நேமிநாதன் நிரோஸ் தலைமையில் சடங்குகள் இடம்பெற இருக்கின்றது.

தினமும் பகல் பூசை 1.00 மணிக்கும் இரவு பூசை 7.00 மணிக்கும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

15 ஆம் திகதி திங்கள் கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம்பெற இருக்கின்றது.

20ஆம் தேதி செவ்வாய்க்கிழமை முத்துச்சரம் புறத்தில் அம்பாள் எழுந்தருளி வீதியுலா வருகிறார்.

22ஆம் திகதி திங்கள்கிழமை காலை 6 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம் பெற்று தீமிதிப்பு வைபவம் இடம்பெறும். அன்று அன்னதான நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது.

இறுதியாக 29ஆம் திகதி திங்கள் கிழமை இரவு எட்டாம் நாள் வைரவர் இடும்பன் திருச்சடங்கு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபைத்தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் மேலும் தெரிவிக்கின்றார்.











# மன்னார் நகர சபையால் வடிகான் சுத்தப்படுத்தல்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகர சபை எல்லைக்குள் நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாமல் உரிய பராமரிப்பின்றி பிளாஸ்டிக் மற்றும் ஏனைய கழிவுகளால் நிறைந்து காணப்படும் பிரதான வாய்க்கால்களை சுத்தப்படுத்தும் பணி இன்று வியாழக்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை இம்மாத இறுதி வரை இடம்பெறவுள்ளது.

மழையுடன் கூடிய காலநிலை ஏற்படவுள்ள நிலையில். மன்னார் நகர் பகுதிக்குள் ஏற்படும் வெள்ள பாதிப்புகளை குறைக்கும் முகமாக நகரசபை ஊழியர்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்கள், நகரசபை சுகாதார உத்தியோகஸ்தரின் பங்குபற்றுதலுடன் இந்த சுத்தப்படுத்தும் பணி இடம்பெற்று வருகின்றது.

குறிப்பாக எமில் நகர் தொடக்கம் பனங்கட்டு கொட்டு பகுதியூடாக கழிவு நீர் வழிந்தோடி கடலுடன் கலக்கும் பிரதான கால்வாய் முதல் கட்டமாக சுத்தப்படுத்தப்பட்டு கழிவுகள் அகற்ற பட்டதுடன், இதனை தொடர்ந்து இம்மாதம் முழுவதும் பிரதான வாய்கால்கள் அனைத்தும் நகரசபையால் சுத்தப்படுத்தப்பட உள்ளன,

அதே நேரம் இம்முறை வடிகால் துப்பரவுக்காகவும் பராமரிப்புக்காவும் மன்னார் நகர சபையால் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.















# பஸ் சேவையை ஆரம்பிக்கக் கோரி நவகிரிநகர் மக்கள் ஆர்ப்பாட்டம்

இடைநிறுத்தப்பட்ட பஸ் சேவையை மீள ஆரம்பிக்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேசத்தின் நவகிரிநகர் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மட்டக்களப்பிலிருந்து தினமும் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் நவகிரிநகர் வரையில் போக்குவரத்தில் ஈடுபட்ட வந்த இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு சாலைக்கு சொந்தமான பஸ் அப்பகுதிக்குரிய சேவையை ஒருவார காலத்திற்கு மேலாக திடீரென நிறுத்தியதாக தெரிவித்து, அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் இணைந்து பதாகைளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டிஸ் மாமா பஸ் வண்டிய மீண்டும் பெற்றுதாங்க, நாங்களும் ஏனையோரைப் போன்று படிக்க வேண்டும், எமது கிராம மக்களின் குரல்தான் ஆர்.டிஎஸ், எமது குரலை அடக்கும் பாசிச அரசியல் வாதிகளே ஒழிக, அரசாங்கமே எங்களுடைய அடிப்படை உரிமைகயான போக்குவரத்தின் பறிக்காதே, காலையில் யானைத் தொல்லை மாலையில் மாட்டுத்தொல்லை, பாடசாலை செல்வதும் போக்குவரத்து தொல்லையாகிவிட்டது, போன்ற பல வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெல்லாவெளியில் அமைந்துள்ள போரதீவுபற்று பிரதேச சபைக்கு முன்னால் உழவு இயந்திரங்களில் வந்திறங்கி ஒன்றுகூடிய பொதுமக்கள், கோசங்களை எழுப்பியவாறும், பதாதைகளை ஏந்தியவாறு வெல்லாவெளியில் அமைந்துள்ள பிரதேச செயலகம் வரை சென்றனர். பிரதேச செயலகத்திற்கு முன்னால் வைத்து இலங்கை போக்குவரத்து சாலையின் போக்குவரத்து சேவையை மீறப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இடத்திற்கு வருகை தந்த வெல்லாவெளி பொலிஸார் ஆர்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடி பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கு முயற்சித்த வேளையிலும், தமக்கு உடன் தீர்வு வேண்டும் என தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்கு இணங்கவில்லை,

இந்நிலையில் தமது பாடசாலையை சேர்ந்த மாணவர்கள் சீருடையுடன் ஆர்பா–ட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையை ஏற்க முடியாது என கூறி சம்பவ இடத்திற்கு வந்த குறித்த பாடசாலை மாணவர்களின்அதிபர்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டமாணவர்களை உடன் வெளியேறுமாறும் தெரிவித்தார்.

எனினும் தமது பிள்ளைகள் கடந்த ஒரு வார காலமாக பாடசாலைக்கு செல்லவில்லை இன்றைய தினமும் பாடசாலைக்கு செல்ல காத்திருந்த வேளையிலும், பாடசாலைக்கு செல்வதற்கு பஸ் இன்மையால், நாம் பிள்ளைகளை இங்கு அழைத்து வந்துள்ளோம், எமது பிள்ளைகள் ஏன் பாடசாலைக்கு வர முடியாது என கேட்க முடியாத அதிபர் போக்குவரத்துக்காக போராடும், எமது மாணவர்களை தடுக்க முடியாது என தெரிவித்து, பாடசாலை அதிபருக்கும், ஆர்ப்பாட்டகாரர்களுக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக அதிபர் அங்கிருந்து வெளியேறினார்.

அத்துடன், போரதீவுபற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ஆர்ப்பாட்ட காரணங்களுடன் கலந்துரையாடியதற்கிணங்க உதவிப் பிரதேச செயலாளர், இலங்கை போக்குவரத்து சபையின் கிழக்கு மாகாண பொது முகாமையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பினை மேற்கொண்டு நிலைமையை எடுத்துக்கூறினார்.

இன்று முதல் மட்டக்களப்பிலிருந்து நவகிரிநகருக்கான போக்குவரத்து சேவை சீராக இடம்பெறும் என இலங்கை போக்குவரத்து சபையின் கிழக்கு மாகாண பொது முகாமையாளர் தெரிவித்தார் என ஆர்ப்பாட்டகாரர்களுக்கு உதவிப்பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இன்று முதல் தொடர்ச்சியாக தமது பிரதேசத்திற்குரிய போக்குவரத்து சேவை ஈடுபடுத்தப்படவில்லையாயின் தமது போராட்டம் தொடரும் என தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.











# அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தால் தொழிலுக்குத் தயார்படுத்தும் செயலமர்வு

இளைஞர்கள் எவ்வாறு தங்களைத் தொழிலுக்குத் தயார் செய்து கொள்வது, மேலும் அறிவு, திறன், மனப்பாங்கு ரீதியாக எவ்வாறு முன்னேற்பாடு செய்ய வேண்டும் போன்ற விடயங்களை உள்ளடக்கிய செயலமர்வு நடத்தப்பட்டு வருவதாக அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் இளைஞர்களுக்கான நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் அனுலா அன்டன் தெரிவித்தார்.

சைல்ட் பண்ட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனம் ஏற்பாடு செய்த, இளைஞர்களைத் தொழிலுக்குத் தயார்படுத்தும் நோக்கில் அமைந்த செயலமர்வு மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழிநுட்பக் கல்லூரியில் நேற்று புதன்கிழமை இடம் பெற்றது.

இப்பயிற்சி நெறியில் சுமார் 50 இளைஞர் யுவதிகள் பங்கேற்றனர்.

இவ்வாறானதொரு அடுத்த செயலமர்வு எதிர்வரும் நாளை வெள்ளிக்கிழமையும் மஞ்சந்தொடுவாய் தொழிநுட்பக் கல்லூரியில நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.











# நேபாளத்தில் சிக்கிய 240 பேரை மீட்கச் செல்லும் தனி விமானம்

## ஆந்திர அமைச்சர் லோகேஷ் நடவடிக்கை

நேபாளத்தில் சிக்கியுள்ள ஆந்திராவை சேர்ந்த 240 பேரை அங்கிருந்து மீட்டு தனி விமானம் மூலம் விசாகப்பட்டினம் அழைத்துவர ஆந்திர அமைச்சர் நாரா லோகேஷ் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

நேபாளத்தில் உள்நாட்டு கலவரம் ஏற்பட்டுள்ளது. இதில் அங்கு சுற்றுலா சென்ற இந்தியர்கள் பலர் சிக்கியுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களில் ஆந்திராவை சேர்ந்தவர்களும் உள்ளனர். இவர்களில் சிலர் அமராவதியில் உள்ள ஆந்திர அதிகாரிகளை தொடர்புகொண்டு தங்களை பத்திரமாக மீட்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் மகனும் மாநில பொலிஸ் அமைச்சருமான லோகேஷ், உடனடியாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடன் அமராவதியில் ஆலோசனை நடத்தினார். அப்போது, நேபாளத்தில் சிக்கியுள்ளவர்களிடம் வாட்ஸ் ஆப் காணொலி மூலம் பேசினார்.


காத்மாண்டு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆந்திராவை சேர்ந்த மொத்தம் 240 பேர் சிக்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவர்களிடம், உங்களை விமானம் மூலம் மீட்கிறோம். அதுவரை நீங்கள் தங்கியுள்ள அறைகளை விட்டு வெளியே வர வேண்டாம் என லோகேஷ் கேட்டுக்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் லோகேஷ் பேசுகையில்,

"நேபாளத்தில் 240 ஆந்திர மக்கள் சிக்கி இருப்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது குறித்து மத்திய வெளியுறவு அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை மீட்க விரைவில் தனி விமானம் அனுப்பி வைக்கப்படும். அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டு விசாகப்பட்டினம் அழைத்து வரப்படுவர்." என்றார்.

தெலுங்கானாவை சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோரும் நேபாள கலவரத்தில் சிக்கி இருப்பதாக தெரியவந்துள்ளது. இவர்களுக்கென டெல்லியில் உள்ள தெலுங்கானா பவன் அதிகாரிகளின் தொலைபேசி எண்களை இணையத்தில் தெலுங்கானா அரசு வெளியிட்டுள்ளது. இவர்கள் தனி விமானம் மூலம் ஹைதராபாத் அழைத்து வரப்படுவார்கள் என தெலுங்கானா அமைச்சர்கள் உறுதி அளித்துள்ளனர்.

நேபாளத்தில் சிக்கியுள்ள ஆந்திராவை சேர்ந்த ஒருவரிடம் நேற்று வாட்ஸ்ஆப் காணொலி மூலம் அமைச்சர் லோகேஷ் பேசியுள்ளார்.





# இந்தியா - அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுக்கள் தொடர்கின்றன

## ட்ரம்ப் அறிவிப்புக்கு பிரதமர் மோடி வரவேற்பு

இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தக பேச்சுவார்த்தை தொடர்கிறது என்றும், பிரதமர் மோடியுடன் பேச ஆவலாக உள்ளேன் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையில், ட்ரம்புடன் பேச நானும் ஆவலாக உள்ளேன் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக 2 ஆவது முறையாக பொறுப்பேற்ற டொனல்ட் ட்ரம்ப், உலக நாடுகள் தங்கள் நாட்டு பொருள் களுக்கு அதிக வரி விதிப்பதாக குற்றம்சாட்டினார். இதனால், பதிலுக்கு பதில் வரி விதிக்கப்படும் எனக் கூறி ஒரு பட்டியலை வெளியிட்டார். இதன்படி, இந்திய பொருள்களுக்கு 25 வீத வரி விதித்தார்.

இதனிடையே, இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்துவது தொடர்பாக இந்தியா, அமெரிக்கா இடையே பல சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால், சில விடயங்களில் உடன்பாடு எட்டப்படாததால் இழுபறி நீடித்தது.

இதேபோல, ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வர ட்ரம்ப் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார். இதன்படி, ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதால் உக்ரைன் போருக்கு இந்தியா மறைமுகமாக உதவுவதாக குற்றம்சாட்டினார். கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தாவிட்டால் கூடுதலாக 25 வரி வரி விதிக்கப்படும் என அறிவித்தார்.

இதை ஏற்க இந்தியா மறுத்ததால், கூடுதலாக 25 வீத வரி அமலுக்கு வந்தது. இதன் மூலம் இந்திய பொருள்கள் மீது 50 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இது நியாயமற்றது என்றும், ஏற்கத்தக்கது அல்ல என்றும் இந்தியா தெரிவித்தது.

மேலும், பாகிஸ்தான், இந்தியா இடையிலான போரை தான்தான் நிறுத்தினேன் என தொடர்ந்து கூறி வந்தார். இதற்கு இந்தியா மறுப்பு தெரிவித்தது. இதனால், அமெரிக்கா, இந்தியா இடையிலான உறவில் உரசல் ஏற்பட்டது. இதற்கு நடுவே, அதிபர் ட்ரம்ப் 4 முறை பிரதமர் மோடியை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயற்சி செய்தார். ஆனால், அவரது அழைப்பை பிரதமர் மோடி ஏற்கவில்லை என தகவல் வெளியானது.

அமெரிக்காவுடன் உரசல் ஏற்பட்ட நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, 7 ஆண்டுக்கு பிறகு சீனாவுக்கு சென்றார். அங்கு நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்றார். அங்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பை ட்ரம்ப் விமர்சித்தார். மேலும் ட்ரம்பின் வரி விதிப்பால் இந்தியா சீனாவுடன் நெருங்கி வருவதாக அமெரிக்காவைச் சேர்ந்த நிபுணர்கள் குற்றம்சாட்டினர்.

இதையடுத்து, பிரதமர் மோடி எப்போதும் எனது நண்பர்தான் என்றும், ஆனால் அவரின் சில நடவடிக்கைகளை நான் விரும்பவில்லை என்றும் ட்ரம்ப் சில தினங்களுக்கு முன்பு கூறிஇருந்தார். இதுபோல இந்தியா, அமெரிக்கா இடையே நல்ல நட்புறவு உள்ளது. அதுபற்றி கவலைப்படத் தேவையில்லை என்றும் ட்ரம்ப் கூறியிருந்தார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையில், ட்ரம்பின் உணர்வுகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் குறித்த நேர்மறையான மதிப்பீட்டை பாராட்டுகிறேன் என்று பிரதமர் மோடி கூறியிருந்தார்.

இந்த சூழ்நிலையில், ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் நேற்று முன்தினம் வெளியிட்ட பதிவில்,

"இந்தியா, அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தடைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறுகிறது. வரும் வாரங்களில் என்னுடைய சிறந்த நண்பர் பிரதமர் மோடியுடன் பேச ஆவலாக இருக்கிறேன். இரண்டு சிறந்த நாடுகளுக்கு இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிவுக்கு வருவதில் எந்த சிரமமும் இருக்காது என்று நான் உறுதியாக நம்புகிறேன்." என கூறி உள்ளார்.

ட்ரம்பின் கருத்துக்கு பதில் அளிக்கும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில்,

"இந்தியாவும் அமெரிக்காவும் நெருங்கிய நட்பு நாடுகள், அத்துடன் இயற்கையான கூட்டாளியும் கூட. இந்தியா, அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தை, இருதரப்பு கூட்டாண்மையின் எல்லையற்ற வாய்ப்புகளை திறக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த பேச்சுவார்த்தையை விரைந்து முடிக்க எங்கள் அதிகாரிகள் குழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நானும் அதிபர் ட்ரம்புடன் பேச ஆவலுடன் இருக்கிறேன். இரு நாட்டு மக்களுக்கும் நல்ல எதிர்காலத்தை உறுதி செய்ய நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவோம்" என கூறியுள்ளார்.

பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட இந்த பதிவை, ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். இது இருதரப்பு உறவில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறியாக அமைந்துள்ளது.





# ட்ரம்ப்பின் ஆதரவாளரான சார்லி கிர்க் சுட்டுக்கொலை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் தீவிர ஆதரவாளரான சார்லி கிர்க், பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பேசிக் கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

31 வயதான சார்லி கிர்க், காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

உட்டா பல்கலைக்கழக நிகழ்ச்சியில் சார்லி கிர்க் அமர்ந்து மாணவர்களுடன் உரையாடுவதும், அப்போது அடையாளம் தெரியாத ஒருவர் அவரை அவரது கழுத்தில் சுட்டுக் கொல்வதும் காணொலியில் பதிவாகியுள்ளது.

அவரை சுட்டுக் கொன்றவர் யார்? எதற்காக சுட்டார் என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. மேலும், ஸ்வாட் பிரிவு பொலிஸார் சுட்டுக் கொன்றவர் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட சார்லி கிர்க்கிற்கு எரிக்கா என்ற மனைவியும், இரண்டு குழந்தைகளும் உள்ளனர்.

சார்லி கிர்க்கின் மரணத்தை உறுதிப்படுத்திய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தன்னுடைய ட்ருத் சோஷியல் பக்கத்தில் பதிவு ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

அந்தப் பதிவில், “தி கிரேட் புகழ்பெற்ற சார்லி கிர்க் மரணமடைந்துவிட்டார். அமெரிக்காவில் உள்ள இளைஞர்களின் மனதை சார்லியைவிட யாரும் புரிந்துகொண்டது இல்லை. அவர் அனைவராலும் நேசிக்கப்பட்டார், புகழப்பட்டார்; ஆனால், அவர் தற்போது நம்மிடம் இல்லை.

சார்லியின் மறைவுக்கு அவரது மனைவி எரிக்காவுக்கு என்னுடைய மனைவி மெலனியா மற்றும் என்னுடைய சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்களை உன்னை நேசிக்கிறோம் சார்லி!” எனப் பதிவிட்டுள்ளார்.



# டோஹா தாக்குதல் வெற்றி பெறவில்லை: இஸ்ரேலிய இராணுவத்தினருக்கு கவலை

கடந்த செவ்வாயன்று டோஹாவில் சிரேஷ்ட ஹமாஸ் தலைவர்களைக் குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு காணாமல் போன இருவரைத் தொடர்ந்தும் தேடி வருவதாக கட்டார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், மிகவும் சர்ச்சைக்குரிய தாக்குதல் வெற்றி பெறவில்லை என்று இஸ்ரேலிய இராணுவத் தரப்புக்களில் கவலை ஏற்பட்டுள்ளதாக, இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலின்போது பலியான, ஹமாஸ் கீழ் மட்ட உறுப்பினர்களில் மூன்று பேரின் உடல்களைக் கட்டார் உள்துறை அமைச்சகம் அடையாளம் கண்டுள்ளது.

சம்பவத்தில் கட்டாரின் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டார்.

எனினும், தமது சிரேஷ்ட பேச்சு வார்த்தையாளர் கலீல் அல் ஹய்யாவை படுகொலை செய்யும் இஸ்ரேலின் முயற்சி இந்தத் தாக்குதலின்போது தோல்வியடைந்ததாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.




# நேபாள போராட்டம் கட்டுப்பாட்டுக்குள்

நேபாளத்தில் 26 சமூக ஊடகத் தளங்கள் மீதான அரசாங்கத்தின் தடைக்கு எதிராக நடத்தப்பட்ட தொடர் போராட்டங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஊழல் எதிர்ப்பு போராட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தீ வைப்பு மற்றும் வன்முறையாக அதிகரித்தன, கோபமடைந்த மக்கள் அரசியல்வாதிகளின் வீடுகளையும், நாட்டின் நாடாளுமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் உள்ளிட்ட அரசு கட்டடங்களையும் அழித்தார்கள்.

வன்முறையைத் தொடர்ந்து நேபாள ஜனாதிபதி மற்றும் பிரதமர் தங்கள் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்தனர்.

இரண்டு நாள் வன்முறையில் 30 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 1,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேபாளத்தை இராணுவம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது, மூடப்பட்ட காத்மண்டு விமான நிலையம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது என்று வெளிநாட்டு தகவல்கள் தெரிவித்தன.

நேபாளத்தில் வன்முறை சூழ்நிலையைப் பயன்படுத்தி, நாடு முழுவதும் உள்ள சிறைகளிலிருந்து 7,500 க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிச் சென்றதாக நாட்டின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேபோல், நேபாளத்தில் சில நாள்கள் போராட்டங்களுக்குப் பிறகு தீ வைக்கப்பட்டு அழிக்கப்பட்ட இடங்கள் காத்மண்டு நகரவாசிகள் மற்றும் இளைஞர் சமூகத்தினரால் சுத்தம் செய்யப்பட்டன.

இதற்கிடையில், நேபாளத்தில் ஏற்பட்ட மோதல் சூழ்நிலை காரணமாக எந்த இலங்கையருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.







கனடா முரசு
வியாழக்கிழமை 11/09/2025

பாகிஸ்தான் மக்களுக்கு கனடா அரசு நிதி உதவி

03



# கனடாவில் பாடசாலை பஸ்ஸில் தீ விபத்து; மயிரிழையில் உயிர் தப்பினர் மாணவர்கள்

**கனடாவின் கியூபெக் மாகாணத்திலுள்ள மொன்றியலில் பாடசாலை மாணவ மாணவியர் பயணிக்கும் பேருந்து ஒன்றில் திடீரென தீப்பற்றியுள்ளது.**

**நேற்றுக் காலை 8.00 மணியளவில், விக்டோரியா அவென்யூவுக்கு அருகே நின்றுகொண்டிருந்த பாடசாலை பேருந்து ஒன்றில் ஐந்து சிறுபிள்ளைகள் அமர்ந்திருந்திருக்கிறார்கள்.**

அப்போது, ஏதோ வித்தியாசமான வாசம் வீசுவதையும், பேருந்தின் முன் பக்கத்திலிருந்து புகை வருவதையும் கவனித்த பேருந்தின் ஓட்டுநர் உடனடியாக பிள்ளைகளை பேருந்திலிருந்து இறக்கி பாதுகாப்பாக ஒரு கட்டிடத்துக்குள் கொண்டு விட்டு விட்டு அவசர உதவியை அழைத்துள்ளார்.

அவர்கள் பேருந்திலிருந்து இறங்கிய சிறிது நேரத்தில் பேருந்து பயங்கரமாக தீப்பற்றி எரியத் தொடங்கியுள்ளது.

சரியான நேரத்தில் சமயோகிதமாக முடிவெடுத்த ஓட்டுநரால் ஐந்து பிள்ளைகள் உயிரும் அவரது உயிரும் காப்பாற்றப்பட்டுள்ளது.

அந்த பேருந்து பேட்டரியில் இயங்கும் பேருந்து ஆகும். ஆனால், பேட்டரியில் ஏற்பட்ட பிரச்சினையால் தீப்பிடிக்கவில்லை என்று தெரிவித்துள்ள தீயணைப்புத்துறையினர், பேட்டரி தீயால் பாதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.





# போலந்து, உக்ரைனுக்கு ஆதரவு வழங்கப்படும்

### வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவிப்பு

போலந்து மற்றும் உக்ரைனுக்கு கனடா முழு ஆதரவு வழங்கப்படும் என கனடா வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ட்ரோன்கள் நாட்டு வான்வெளியை மீறியதை அடுத்து அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

பல ரஷ்ய ட்ரோன்கள் இரவொன்றில் பல மணி நேரம் அதன் வான் வெளிக்குள் நுழைந்ததாகவும், அவை நேட்டோ படையின் உதவியுடன் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் போலந்து அறிவித்துள்ளது.

இது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சமாதானத்தை நிராகரிப்பதற்கான இன்னொரு கொடிய உதாரணம் என அனிதா ஆனந்த் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கனடா மீண்டும் ரஷ்யா தனது அநியாயமான, சட்டவிரோதமான உக்ரைன் போரைக் கைவிட வேண்டும் எனக் கோரியுள்ளது.

ரஷ்யா பதற்றத்தை தூண்டும் வகையில் இந்த ட்ரோன் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக ஐரோப்பிய தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, போலந்து மீது தாக்குதல்கள் எதுவும் நடத்தப்படவில்லை என ரஷ்யா மறுப்பு வெளியிட்டுள்ளது.

# கனடாவில் இளம் பெண்களின் தற்கொலை விகிதம் அதிகரிப்பு

கனடாவில் இளம் பெண்களிடையே தற்கொலை விகிதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இருபது ஆண்டுகளில் கனடாவில் தற்கொலை விகிதங்கள் பொதுவாகக் குறைந்தாலும், இளம்பெண்கள் (10-19 வயது) மத்தியில் அந்த விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இளம் பெண்கள் மத்தியில் தற்கொலை முயற்சி மற்றும் தற்கொலை விகிதம் தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்வதாக பாஸ்டன் பல்கலைக்கழக மனநல மருத்துவ உதவி பேராசிரியர் தூங்பின் ஓ தெரிவித்துள்ளார்.

2001 முதல் 2023 வரை கனடாவில் 10-19 வயது பெண் இளையோர்களின் தற்கொலை விகிதம் ஆண்டுக்கு சுமார் 2 வீதம் அதிகரித்துள்ளது. அதே வயதுக்குழுவில் உள்ள சிறுவர்களின் விகிதம் ஆண்டுக்கு சுமார் 1 வீதம் குறைந்துள்ளது.

ஒப்பீட்டளவில், அமெரிக்காவில் அதே காலகட்டத்தில் இளம்பெண்களின் தற்கொலை விகிதம் 3.4 வீதம் வரை உயர்ந்தது, ஆனால் 2017க்குப் பிறகு குறையத் தொடங்கியது.



தென் கொரியாவில் 2015 - 2023 இடையே இளம்பெண்களின் தற்கொலை விகிதம் 11 வீதம் வரை அதிகரித்துள்ளது.சிறுவர்களிடமும் வருடத்திற்கு 5 வீதம் உயர்வு பதிவாகியுள்ளது.

உடல் தோற்ற அழுத்தம் போன்றவை, ஆன்லைன் துன்புறுத்தல் மற்றும் இளம்பெண்களுக்கு உரிய மனநல பராமரிப்பு குறைபாடு ஆகியவை முக்கிய காரணிகள் எனக் கருதப்படுகின்றன.



# பாகிஸ்தான் மக்களுக்கு கனடா அரசு நிதி உதவி

பாகிஸ்தான் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடா நிதி உதவி வழங்கியுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த ஜூன் மாதம் தொடங்கிய கடும் பருவமழை மற்றும் வெள்ளப் பேரழிவால் சுமார் 40 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு, 900 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஆப்கான் அகதிகளுக்கும் உதவியாக கனடா 2.6 மில்லியன் கனேடிய டாலர் மனிதாபிமான உதவியை வழங்குவதாக அறிவித்துள்ளது.

சர்வதேச அபிவிருத்தி விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் ரன்தீப் சராய் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் நிறுவனத்திற்கு இரண்டு மில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளது.

இது பெரும்பாலும் ஆப்கான் அகதிகளை ஆதரித்து வந்தாலும், தற்போது அவசர நிவாரண பணிகளிலும் ஈடுபட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரிய வெள்ளத்துக்குப் பிறகும், கனடா 58 மில்லியன் டொலர் உதவியை பாகிஸ்தானுக்கு வழங்கியிருந்தது.

# மந்த நிலை நோக்கி நகரும் கனடாவின் பொருளாதாரம்

கனடா மற்றும் அமெரிக்க பொருளாதாரம் மந்த நிலை நோக்கி நகர்வதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடா வங்கி முன்னாள் ஆளுநர் ஸ்டீபன் போலோஸ், வர்த்தக வரிகள், புவிசார் பதற்றங்கள் மற்றும் பொருளாதார அச்சங்கள் காரணமாக, கனடாவும் அமெரிக்காவும் பொருளாதார மந்தநிலைக்கு செல்லும் அபாயம் உள்ளது என்று எச்சரித்துள்ளார்.

இரு நாடுகளின் பொருளாதார பாதை நல்லதல்ல. இன்னும் மந்த நிலை வரவில்லை என்றாலும் அதற்குத் திசை திரும்பி வருகிறது என அவர் கூறியுள்ளார்.

கனடாவில் வேலைவாய்ப்பு சந்தையில் மந்தம் தெளிவாகத் தெரிகிறது என்று போலோஸ் தெரிவித்துள்ளார்.

2025 ஆகஸ்ட் மாதத்தில் வேலை இழந்தோர் 66,000 ஆக உயர்ந்ததுள்ளது. வேலை இல்லாதோரின் விகிதம் 7.1 வீதமாக அதிகரித்துள்ளது.



இளைஞர் வேலை இல்லாதோரின் விகிதம் 14.5 வீத தேசிய சராசரியின் இரட்டிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

செயற்கை நுண்ணறிவு வேலை வாய்ப்பு சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டினார்.